

கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ராமநாதபுரம் பகுதிக்குட்பட்ட சுப்பையா லேஅவுட், திருவள்ளுவர் நகர், சவுரிபாளையம் பிரிவு பகுதிகளில் தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் கோவை மாநகர் மாவட்டக் கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், பகுதி கழக செயலாளர் பசுபதி உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கொள்கையாக என்றும் வாழ்கிறார் கலைஞர்!

# ‘தாய்க் கழகம்’ சார்பில் 103 ஊர்களில் பிறந்தநாள் விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூன்.4-

முத்தமிழறிஞர் கலைஞரின் 103 ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை வருமாறு :-

தந்தை பெரியாரின் உருவச் சிலைகளோடு ‘பெரியார் நினைவு சமத்துவபுரங்களை’ அமைத்துச் சாதனை படைத்தார்!

மறைந்தும் மறையாத நம் கலைஞரின் பிறந்தநாள் விழாவினை தாய்க்கழகம் 103 ஊர்களில், பெருமிதப் பூரிப்போடு கொண்டாடுகிறது!

‘மானமிகு சுய மரியாதைக்காரன்’ என்று தன்னை ஒரு வரியில் அடையாளப்படுத்திய நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது 103 ஆம் ஆண்டு பிறந்த நாள் (3.6.2026).

**பல்கலைக் கொள்கலனாகத் திகழ்ந்தவர்!**

மாணவப் பருவத்திலேயே இந்தி மொழித் திணிப்புக்கும், அதன்மூலம் (சமஸ்கிருத) ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பையும் நடத்த முயன்ற காலத்தில் (1937-1938) தனது 14 ஆவது வயதில், ‘புலி வில் கயல்’ பொறித்த கொடியைக் கையிலேந்தி,

‘‘ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்! - நீ

தேடிவந்த நாடிதல்லவே! - புறப்பட்டுப் போ!’’

என்ற பாவலர் பாலசுந்தரத்தின் பாட்டினை முழங்கியவர். தந்தை பெரியார் தம் இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டு, ஈரோட்டுக் குருகுல வாசத்தினால் பெரிதும் கொள்கைச் செதுக்கம், லட்சியத்தில் மாறாப் பற்றும் கொண்டு, பல்கலைக் கொள்கலனாகத் தம் - இடையறா உழைப்பின்மூலம் திராவிட இயக்கத் தொண்டராகி, பேரறிஞர் அண்ணாவின் பாசத் தம்பியாக அரை நூற்றாண்டு காலம் பயணித்தார். தன் குருநாதரான தந்தை பெரியாரின் கொள்கைகளைச் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் மாற்றி, ஒரு பெரும் சமூகப் புரட்சியை நடத்திய சரித்திர நாயகர் அவர். அவரே நமது ஒப்பற்ற, ஆற்றல்மிக்க ஆளுமை!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரால் பாராட்டப் பெற்ற வித்தகர்!

பேச்சு, எழுத்து, நாடகம், ஆட்சி ஆளுமை, போராட்டக் களத்தில், தன்னை வார்த்தெடுத்த தலைவர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களாலேயே பாராட்டுப் பெற்ற ஒரு வியக்கத்தக்க வித்தகர் நம் கலைஞர்.

ஆரியத்தால் நம் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பிறவி இழிவான ‘சூத்திர’, ‘பஞ்சம’ பட்டங்களை ஒழித்து, இழந்த மானத்தை மீட்டெடுக்கத் தந்தை பெரியார் தனது 95 ஆம் வயதிலும் களம் காண முயன்றார். அய்யாவின் இறுதி விருப்பமான ஜாதி தீண்டாமை ஒழிப்பின் முக்கிய அம்சமாக, “ஆதிதிராவிடர் உட்பட அனைத்து ஜாதியினரும் கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட வேண்டும்’’ என்ற போராட்டம் அமைந்தது.

**நீதிமன்றங்களில் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டவர்!**

அப்போது, ‘‘அதைச் சட்டத்தின் மூலமே சாதித்துக் காட்டுவோம் அய்யா’’ என்று உறுதி அளித்து, அரை நூற்றாண்டு காலப் போராட்டத்திற்குப் பிறகு அதற்கான சட்டத்தை இயற்றி, நீதிமன்றங்களில் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டவர் நம் முதலமைச்சர் கலைஞர்!

எனினும், ‘‘முழுமையடையவில்லையே’’ என்ற ஏக்கம் தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளாக இருந்தது. பெரியார் மறைந்தபோது, அவருக்குத் தமிழ்நாடு அரசின் முழு அரசு மரியாதை வழங்க முடியாமல் போன ஆதங்கமும் நீடித்தது. இதையடுத்து வந்த ‘திராவிட மாடல்’ ஆட்சியின் ஒப்பற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் அதனைச் செயல்படுத்தி, அவ்வெற்றியை முழுமையடையச் செய்தார்.

**தந்தை பெரியாரின் உருவச் சிலைகளோடு ‘பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நாடெங்கும் ஜாதி ஒழிப்பிற்கான முன்னெடுப்பாக - வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் - அனைத்து ஒன்றியங்களிலும் தந்தை பெரியாரின் உருவச் சிலைகளோடு ‘பெரியார் நினைவு சமத்துவபுரங்களை’ அமைத்துச் சாதனை படைத்தார்.

மூத்த மொழியான தமிழை ‘நீச பாஷை’ என்றும், சமஸ்கிருதத்தைத் ‘தேவ பாஷை’ என்றும் சொல்லி, ஜாதிப் பாகுபாட்டைப் போல நம் மொழியைத் தாழ்த்தி வைத்திருந்த ஆதிக்கத்தை உடைத்தவர் கலைஞர். தமிழ் மொழி ‘நீச பாஷை’ அல்ல, அது ஒரு ‘செம்மொழி’ என்று சட்டம் இயற்றி அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தார். அதன் பிறகே, வழக்கொழிந்த வடமொழியான சமஸ்கிருதமும் கலைஞர் போட்ட பாதையின் மூலமாக அந்தத் தகுதியைப் பெற்றது. இது சாதாரண சாதனை அல்ல!

இந்திய சமூகநீதிச் சரித்திரத்திலேயே முதன்முறையாக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெனத் தனித்துறையையும் தனி அமைச்சகத்தையும் ஏற்படுத்தியவர்; ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூகநீதியில் ஒளிவீச்சுத் தொடரும்படி செய்தவர்.

**தாய்க்கழகத்தின் சார்பில், 103 ஊர்களில், 103 கூட்டங்கள்!**

திரைப்படங்கள், நாடகங்கள், புதினங்கள், சட்டமன்ற நடவடிக்கைகள், போராட்டக் களங்கள், சென்னை கோட்டைக்கு முன்பே, பாளையங்கோட்டை சிறைக் கோட்டத்திற்குச் சென்று, தியாகத் தழும்புகளைப் பெற்றதோடு, காங்கிரஸ் அரசால் பிரகடனப் படுத்தப்பட்ட நெருக்கடி நிலையின்போது, தி.மு.க.வை “தாய்க்கோழி, தனது குஞ்சுகளைக் காப்பதுபோல’’ காத்து, தோல்விகளால் துவண்டுவிடாமல், கொள்கைச் சிங்கமாய், ஆளுமையில் அவனியோரின் பாராட்டு மழையில் நனைந்து, மறைந்தும் மறையாத நம் கலைஞரின் பிறந்தநாள் விழாவை, தாய்க்கழகம் 103 ஊர்களில் தோழமைக் கட்சிகளோடு இணைந்து நடத்துகிறது. இன்றைய இளைய தலைமுறையினருக்குக் ‘கலைஞர் வெளிச்சம்’ பற்றி விளக்கும் நோக்கோடும், தாயின் பெருமிதப் பூரிப்போடும் இவ்விழாவைக் கொண்டாடி மகிழ்கிறோம்! கொள்கையாக என்றும் வாழ்கிறார் கலைஞர்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி ஏற்பாட்டில் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா சிறப்பாகவும் எழுச்சியுடனும் கொண்டாடப்பட்டது மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சரமான தா.மோ.அன்பரசன் அலங்கரித்து வைக்கப்பட்ட கலைஞரின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி அங்கு திரண்டு இருந்த ஏராளமான தாய்மார்களுக்கு நல திட்ட உதவிகளும் அறுசுவை உணவும் வழங்கினார். துணை மேயர் கோ. காமராஜ், பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயலாளரும் மண்டலத் தலைவருமானையே இ. ஜோசப் அண்ணாதுரை, பல்லாவரம் தெற்கு பகுதி கழக செயலாளர் இ.எஸ். பெர்னார்ட், தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ. தமிழ்மாறன், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் என ஏராளமான நிகழ்ச்சி கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் காரிமங்கலம் நகர பகுதியில் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் நிறுவப்பட்ட கொடிகம்பத்தில் கழக இருவண்ண கொடியினை ஏற்றி,முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.உடன் கே.மனோகரன்,சீனிவாசன்,டி.சந்திரசேகர்,முனியப்பன்,பி.சி.ஆர்.மனோகரன்,அடிலம் அன்பழகன்,ரமேஷ்,மா.பா.பூபதி உள்ளிட்ட திமுகவினர் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

## காஞ்சி வடக்கு மாவட்டத்தில் – அனைத்து கிளைகளிலும் கொடி ஏற்றி

# முத்தமிழறிஞர் கலைஞர் திருஉருவப் படத்திற்கு கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை!

## 41 ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்கல்!

காஞ்சிபுரம், ஜூன் 4-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜீன் 3-ஆம் தேதியை செம்மொழி நாளாக கொண்டாடிட வேண்டும் என்று அறிவித்த, கழகத் தலைவர் தளபதி அவர்களின் அன்பு கட்டளையை ஏற்று, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் உள்ள கழக கொடி கம்பங்கள் முன்பு, நேற்று ஜீன்-3 அன்று காலை முத்தமிழறிஞர் கலைஞர் திருஉருவப் படத்தை வண்ண வண்ண மலர்களால் அலங்கரித்து வைத்து கழகத்தினர் அனைவரும், மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். 41 ஆதரவற்றோர் இல்லங்களில் நேற்று பகல் அறுசுவை உணவு வழங்கி செம்மொழி நாளாக கொண்டாடி மகிழ்ந்தனர் என்று, மாவட்ட செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா. மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

மறைந்தும், மறையாமல், தமிழக மக்களின் இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் - நம்முடைய உலக தமிழினத்தின் ஒப்பாரும் - மிக்காரும் இல்லா தனிப்பெரும் தலைவர், திராவிட சூரியனாக திகழ்ந்த நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்தநாளான ஜீன் 3-ஆம் தேதியை, செம்மொழி நாளாக கொண்டாடிட வேண்டும் என்று, நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் தளபதி அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்தநாள் விழாவையொட்டி, நேற்று ஜீன் 3-ஆம் தேதி அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும், கழக தொண்டர்களின் இல்ல விழாவாக - செம்மொழி நாளாக பட்டி - தொட்டியெங்கும் கோலகலமாக கொண்டாடப்பட்டது.

நம்முடைய ஒப்பாரும் - மிக்காரும் இல்லா அன்புத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, நேற்று காலை 9.00 மணியளவில் மாவட்டம் முழுவதும் மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழக கொடிக் கம்பங்கள் இருக்குமிடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் திருஉருவப் படத்தை வண்ண வண்ண மலர்களால் அலங்கரித்து வைத்து, மலர் மாலை அணிவித்து - மலர் தூவி மரியாதை செலுத்தி - இனிப்புகளை வழங்கி, மிகவும் பிரம்மாண்டமான முறையில் எழுச்சியுடன் கொண்டாப்பட்டது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 41 முதியோர் இல்லம், கருணை இல்லம் - பார்வையற்றோர் பள்ளி - மாற்றுத் திறனாளிகள் தங்கும் இல்லம், மனநலம் குன்றியோர் தங்கும் விடுதி, தொழுநோயாளிகள் இல்லம் ஆகியவற்றில் தங்கியுள்ள ஆதரவற்றோர்கள் அனைவருக்கும் நேற்று பகல் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் கலைஞர் பிறந்த நாள் விழா!

## முதியோர் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள் – புழல் எம். நாராயணன் வழங்கினார்!

சென்னை, ஜூன்.4-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் முதியோர் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் 17வது வட்டம் தீயம்பாக்கம் காந்திநகர் பகுதியில் அமைந்துள்ள டீகப் மினிஸ்டரிஸ் முதியோர் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

17-வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வட்ட கழக துணை செயலாளர் எஸ். பாலாஜி, பகுதி பிரதிநிதி சி.மூர்த்தி, வட்ட பொருளாளர் வி. பார்த்தசாரதி, மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகபிரியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், பாகமுகவர்கள் டி. திவாகர், எம். மைக்கேல் என்கின்ற மோகன்ராஜ்,வி. சுமிர், ஜி.கார்த்திக், அரியலூர் டி. வினோத், எஸ். நாகராஜ், கே. ராஜ்குமார், 17 வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் வழக்கறிஞர் எம்.என். தளபதி, விஷ்ணு,விக்கி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முதியோர் காப்பகத்தில் வசிக்கின்ற முதியோர்கள் அனைவருக்கும் போர்வைகள் மற்றும் அறுசுவை அசைவ இரவு உணவு ஆகியவற்றை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

முன்னதாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு முதியோர் இல்லத்தில் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் விநாயகபுரம் கமலநாதன், தீயம்பாக்கம் எம். ஜான்சன், இ. சுதர்சன், ஜி. பூபாலன், தியாகி விஸ்வநாததாஸ் நகர் சுரேஷ், கொசப்பூர் விஜயன், வட பெரும்பாக்கம் பி. செந்தில், இ. கார்த்திக், எம். கோவிந்தன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.

## நௌம்பூர் வே.ராஜன் எம்.சி – ரமணி மாதவன் எம்.சி. பங்கேற்றனர்!

# மதுரவாயல் 147 வது வட்டத்தில் காலை சிற்றுண்டி - அறுசுவை உணவு!

## வட்டச் செயலாளர் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன். 04 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்ட தி.மு.க. சார்பில் நேற்று (03.06.2026 - புதன் கிழமை) முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு எனது தலைமையில் காலை 7.00 மணிக்கு, ஆலப்பாக்கம் நார்ச்சந்தியில் மாவட்டப் பிரதிநிதி ஆலப்பாக்கம் க.பிருந்தாவனன் ஏற்பாட்டிலும்,

காலை 7.30 மணிக்கு, அஷ்டலட்சுமி நகர் போலீஸ் பூத் அருகில் பகுதிப் பிரதிநிதி ஜெயமுருகன் ஏற்பாட்டிலும்,

காலை 8.00 மணிக்கு ஆலப்பாக்கம் கங்கா அவென்யூ பிருந்தாவனம் முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு காலை சிற்றுண்டி மாவட்டப் பிரதிநிதி எம்.ஆர். சதீஷ் ஏற்பாட்டிலும்,

காலை 8.15 மணிக்கு கிருஷ்ணா நகர் 14 வது தெரு சந்திப்பில் வட்ட இளைஞரணி அமைப்பாளர் பி.மணி ஏற்பாட்டிலும்,

காலை 8.30 மணிக்கு சீமாத்தம்மன் கோவில் அருகில் மாவட்டப் பிரதிநிதி ஜி.குப்புசாமி ஏற்பாட்டிலும்,

காலை 9.00 மணிக்கு மேட்டுக்குப்பம் காந்தி தெரு சந்திப்பில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை பகுதி அமைப்பாளர் வி.வெங்கடேசன் ஏற்பாட்டிலும்,

காலை 9.15 மணிக்கு, கங்கா நகர், 2 வது பிரதான சாலை, பஸ் நிறுத்தம் அருகில் பகுதி மாணவர் அணி அமைப்பாளர் மனோஜ் மாதவன் ஏற்பாட்டிலும்,

காலை 9.30 மணிக்கு, கங்கா நகர், 3 வது பிரதான சாலை, ஆட்டோ நிறுத்தம் அருகில் கொடியேற்றி, கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி இனிப்புகள் வழங்கி காலை சிற்றுண்டி மற்றும் அறுசுவை உணவு வாங்கும் நிகழ்ச்சி எனது ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் 11 வது மண்டலக் குழுத் தலைவரும், மதுரவாயல் வடக்கு பகுதிக் கழகச் செயலாளருமான நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக் குழு உறுப்பினர் ரமணி மாதவன் கலந்து கொண்டனர்.

ஆகவே இந்த பிறந்த நாள் விழா கொண்டாட்டத்தில் நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



காஞ்சிபுரம் மாநகராட்சியில் 18 வது வட்டத்தில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளையொட்டி கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அறுசுவை உணவு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. உடன் மாமன்ற உறுப்பினர்கள்.கு சுப்பராயன், திருமதி.மல்லிகா ராமகிருஷ்ணன், கே.குமரன், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் குமரன், வட்ட செயலாளர் பழனி, இளைஞர் அணி மனோஜ், மகளிர் அணி விஜயாபுஷோத்தமன், கீதா மயில்வாகனன் உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.